
## திராவிடத்தால் வாழ்கிறோம்

794

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

### வெறுப்பைச் சம்பாதிக்கும் இந்தி!

இந்தியாவின் முக்கியமான சமூக ஆய்வாளர்களில் ஒருவரான யோகேந்திர யாதவ், ‘ஆனந்த விகடன்’ இதழில் வாரம்தோறும் ‘லிட்மஸ் பக்கங்கள்’ என்ற பத்தியை எழுதி வருகிறார். இந்த வாரம் ஒன்றிய பா.ஜ.க. அரசின் இந்தித் திணிப்பு முயற்சிகள் குறித்து எழுதியிருக்கிறார்.

இந்தித் திணிப்புக்கு எதிராகத் தமிழ்நாட்டில் எழுந்த குரல், இப்போது இந்தியாவின் பிற பகுதிகளில் உள்ள இந்தி பேசாத மாநிலங்களிலும் பரவ ஆரம்பித்துள்ளது. ‘இந்தி எங்கள் தாய்மொழியை அழித்துவிட்டது’ என்று மைதிலி, போஜ்பூரி, வங்காள மொழி பேசுபவர்கள் போர்க்குரல் எழுப்ப ஆரம்பித்துள்ளனர். யோகேந்திர யாதவின் இந்தக் கட்டுரை ஒரு புதிய கோணத்தை முன்வைக்கிறது.

‘இந்தியே இந்திய ஒன்றியத்தின் அலுவல்மொழி’ என்ற போலியான அந்தஸ்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய நேரம் இது’ என்று தொடங்கும் கட்டுரை, திணிப்பின் காரணமாக பல்வேறு மாநிலங்களில் இந்தி மொழி வெறுப்பைச் சம்பாதிப்பதைச் சுட்டிக்காட்டுகிறது. ‘அளவுக்கு அதிகமாகப் பேசி, அளவுக்கு அதிகமாகத் தூங்கி, அளவுக்கு அதிகமாக சாப்பிடும் துடுக்கான ஜீவனைப் போன்றது இந்தி’ என்னும், 60 ஆண்டுகளுக்கு முந்தைய ரகுவீர் சஹாயின் கவிதையைச் சுட்டிக்காட்டுகிறார்.

பிற மாநிலங்களில் இந்தியைத் திணிக்கும் முயற்சிகள் நடைபெறும் சூழலில்தான் ‘வட இந்தியாவில் நடுத்தர வர்க்கத்தினர் இந்தி கற்பதை அவமானமாகக் கருதிப் புறக்கணிக்கத் தொடங்கியிருக்கின்றனர்’ என்கிறார் யோகேந்திர யாதவ். மேலும் ‘இந்தி பேசும் கிராமப்புறப் பகுதிகளில் வாழும் மாணவர்களில் 5–ஆம் வகுப்பு படிக்கும் பலரால் 2–ஆம் வகுப்புக்கான இந்தி பாடப் புத்தகத்தில் ஒரு பத்தியைக்கூட படிக்க முடியவில்லை’ என்கிறார். இன்னொருபுறம் ‘இந்திமொழியில் தரமான பாடப்புத்தகங்களே இல்லை’ என்கிறார். இவை எதையும் சரிசெய்யாமல் மற்ற மாநிலங்களில் இந்தியைத் திணிப்பது சூழலை மோசமாக்குகிறது” என்கிறார்.

### ஃப்ளாஷ்பேக்




**கதிரவனும் சூரியனும், கழகத்தின் பிள்ளைகள்!**

2012-ஆம் ஆண்டு அன்றைய கழக இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் சேலம் மாவட்டத்திற்கு, ‘சேலத்துச் சிங்கம்’ வீரபாண்டியார் அவர்களின் படத்திறப்பு விழாவுக்கு வருகை தந்திருந்தார். அப்போது, என் சகோதரர் மா.செந்தில்குமார் அவர்களையும் உடன் அழைத்துக் கொண்டு என்னுடைய மூத்த மகனுக்குப் பெயர் சூட்டச் சொல்லி, தலைவரிடம் கேட்டேன். ‘கதிரவன்’ என்ற பெயரைச் சூட்டி மகிழ்ந்தார். இதைப் போலவே 2018–ஆம் ஆண்டு இன்றைய இளைஞர் அணிச் செயலாளர் அவர்களிடம் என்னுடைய இளையமகனுக்குப் பெயர் வைக்க அழைத்துச் சென்றபோது, ‘உதயசூரியன்’ என்ற பெயரைச் சூட்டி வாழ்த்தினார். இவ்விரு நிகழ்வுகளும் எங்கள் வாழ்நாளில் மறக்க முடியாதவை..



மா.பிரபாகரன்

**– மா.பிரபாகரன், கிளைச் செயலாளர், ஜெயபுரி, சேலம் மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்

**உள்ளாட்சியில் வெற்றி!**

1986-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதத்தில் தமிழ்நாட்டில் உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெற்றது. 97 நகர மன்றத் தலைவர் பதவிகளுக்கு நடைபெற்ற தேர்தலில், 72 இடங்களில் கழகக் கூட்டணி வெற்றி பெற்றது. கழகம் மட்டும் தனித்து, 64 இடங்களில் வென்றது. அதுபோலவே, ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சி மன்றங்கள் ஆகியவற்றுக்கான தேர்தல்களிலும் கழக அணி பெரும் வெற்றியைப் பெற்றது.

## திராவிட மாடல் அரசு

ர.பிரகாசு

114

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...**




# வெள்ளி நகருக்கு விடிவெள்ளி!

## சேலம் கொலுசுத் தொழிற்பூங்கா!

இரும்பாலையும் மாம்பழமும் மட்டும் சேலத்தின் அடையாளம் அல்ல. கொலுசு உற்பத்தித் தொழிலும் சேலத்தின் முதன்மை அடையாளங்களில் ஒன்று. அங்குள்ள செவ்வாய்ப்பேட்டை, சிவதாபுரம், பனங்காடு, பொன்னம்மாப்பேட்டை, குகை, இளம்பிள்ளை உள்ளிட்ட அறுபதுக்கும் மேற்பட்ட கிராமங்களில் வெள்ளிக் கொலுசு உற்பத்தி, அதிகளவில் நடைபெற்று வருகிறது. குறிப்பாக, வீரபாண்டித் தொகுதியில் உள்ள சிவதாபுரம், பனங்காடு, ஆண்டிப்பட்டிப் பகுதியில் பத்தாயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் வெள்ளிக் கொலுசு தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். ஒட்டுமொத்தமாக, சுமார் ஒன்றரை லட்சம் பேர் நேரடியாகவும் மறைமுகமாகவும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

### தனித்துவமான படைப்புகள்!

இங்கு தயாரிக்கப்படும் வெள்ளிக் கொலுசுகள் பளபளப்பாகவும், காண்போரின் கண்களைக் கவரும் வகையில் அழகுற வடிவமைக்கப்படுவதால், நாடு முழுவதும் நல்ல வரவேற்பு பெற்று உள்ளது. குறிப்பாக ஆந்திரா, மகாராஷ்டிரா, உத்தரப் பிரதேசம், குஜராத், ராஜஸ்தான், பீகார், ஜார்கண்ட், மேற்கு வங்கம் உள்ளிட்ட நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. குடிசைத் தொழிலாக கால் நூற்றாண்டுக்கும் மேலாக, இப்பணியில் ஈடுபட்டு வருவதால், பல்வேறு வடிவமைப்பு மற்றும் ரகங்களில் வெள்ளிக் கொலுசுகள் தயாரிக்கிறார்கள். கம்பி மிஷின், உருக்குக்கடை, மிஷின் பாலிசி, கைமெருகுக்கடை, பூ மிஷின், பொத்துக்குண்டு வளையம் மிஷின், அரும்பு மிஷின், குஷ்பூப் பட்டறை, எஸ்.செயின், சாவித்திரிச் சலங்கை, பட்டை மிஷின், குப்பா மிஷின், கெட்டிப் பூ மிஷின், பொடி மிஷின், கன்னிமாட்டும் மிஷின், லூஸ் பட்டறை என 16 கட்டங்களாக கொலுசு வடிவமைக்கப்படுகிறது.

### இடைவிடாத நெருக்கடிகள்!

கால் கொலுசு மட்டுமின்றி, முத்துக் கொலுசு, இடுப்புச் சரம், மெட்டி, காப்பு, அரைஞாண் போன்ற வெள்ளிப் பொருட்களும் தயாரிக்கப்படுகின்றன. ஒருகாலத்தில் மாதம் ஒன்றுக்கு 50 டன் வெள்ளிப் பொருட்கள் சேலத்தில் தயாரிக்கப்பட்டு, பல்வேறு மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு வந்தன. ஆனால், பணமதிப்பிழப்பு, ஜி.எஸ்.டி., கொரோனா பேரிடர் என அடுத்தடுத்த பா.ஜ.க. ஆட்சியின் பல்வேறு செயற்கை இடர்களும் இயற்கைப் பேரிடரும் கொலுசு உற்பத்தித் தொழிலை ஊசலாட வைத்தது.

இதுமட்டுமின்றி, வெளிமாநிலங்களில் இயந்திரங்களின் மூலம் வெள்ளிப் பொருட்கள் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டதால், சேலம் உற்பத்தியாளர்களுக்கு ஆர்டர்கள் குறையத் தொடங்கின. இரவு-பகல் பாராமல் பணியாற்றி வந்த இவர்கள், வாரத்தில் 2 அல்லது 3 நாட்கள் வேலை இருந்தாலே, பெரிய விஷயமாக மாறிப்போனது. நலிந்துபோன கொலுசு உற்பத்தியாளர்கள் தங்கள் வாழ்வை மேம்படுத்த, சேலத்தில் கொலுசுத் தயாரிப்புக்கான தொழில் பூங்கா, பணியாளர்களுக்கு நலவாரியம் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று 2021-இல் கோரிக்கை விடுத்தனர்.




### கழகம் வாக்குறுதி!

‘எல்லா மாவட்டங்களுக்கும் வளர்ச்சி’ என்ற ஜனநாயகப்படுத்தப்பட்ட வளர்ச்சிக் கோட்பாட்டைக் கொள்கையாகக் கொண்டது திராவிட முன்னேற்றக் கழகம். அதன்படி 2021–ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், வெள்ளிக் கொலுசு உற்பத்தியில் தலைசிறந்து விளங்கக்கூடிய சேலத்தில், 100 கொலுசு உற்பத்தியாளர்களுக்கு, உடனடியாக தொழில் தொடங்குவதற்கு ஏதுவாக ரூ.25 கோடி செலவில் பன்மாடி உற்பத்தி மையம் அமைக்கப்படும். இளைஞர்களுக்குச் சிறந்த வேலைவாய்ப்புகளை அளிக்கும் வகையில், கருப்பூரில் ‘டைடல் மென்பொருள் தொழில்நுட்ப பூங்கா’ ஏற்படுத்தப்படும். ‘பெரும் ஜவுளி பூங்கா’ அமைக்கப்படும் என்ற வாக்குறுதிகள் தி.மு.கழகத்தால் வழங்கப்பட்டிருந்தன.

அதன்படி, சேலத்தில் ‘டைடல் பூங்கா’ ஏற்கெனவே அமைக்கப்பட்டுவிட்டது. ரூ.880 கோடியில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்க, அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதேபோல கொலுசு உற்பத்தியாளர்களின் கோரிக்கையான கொலுசு உற்பத்தித் தொழிற்பூங்காவுக்கான அறிவிப்பு, நாடாளுமன்றத் தேர்தலிலும் கழகத்தின் வாக்குறுதியாகத் தொடர்ந்தது. குறிப்பாக, சேலம் மாவட்டத்தில் ஜவுளி, கொலுசு, ஜவ்வரிசி, நாற்கயிறு, விவசாயம் உள்ளிட்ட பல துறைகளில் உற்பத்தியை அதிகரிக்க, ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு மையம் அமைக்கப்படும் என்று கழகம் வாக்குறுதி அளித்தது. துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேலத்தில் தேர்தல் பரப்புரை மேற்கொண்டபோதும், ‘இந்த வாக்குறுதி நிச்சயம் நிறைவேற்றப்படும்’ என்று உறுதியளித்தார்.

> **தொழில் வாய்ப்புகளையும், அதன் அடையாளத்தையும் மீட்டுத் தருவதாக அமைந்துள்ளது, ‘திராவிட மாடல்’ அரசின் தொழிற்பூங்கா.**

### வெள்ளி நகருக்கு விடிவெள்ளி!

சிட்கோ மூலம் வெள்ளிக் கொலுசு உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில், சேலம், அரியகவுண்டம்பட்டியில் 99 ஆயிரத்து 346 சதுர அடி பரப்பில், தரை மற்றும் மூன்று தளங்களுடன் ரூ.25.34 கோடியில், 102 தொழிற்கூடங்கள் கொண்ட அடுக்கு மாடித் தொழில் வளாகம் கட்டப்பட்டுள்ளது. இந்த வளாகத்தை 25.03.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கி வைத்தார். இந்தத் தொழிற்கூடத்தின் மூலம் 2,000 பேர் நேரடியாகவும், 4,000 பேர் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு பெறும் சூழல் உருவாகியுள்ளது. இதன்மூலம் கொலுசுத் தயாரிப்புக்கான பல்வகைப் பணிகளுக்குத் தனித்தனி இடங்களுக்குச் செல்ல வேண்டிய அலைச்சல் குறையும். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும் சூழல் உருவாகியுள்ளது. ‘வெள்ளி நகர்’ இழந்து வந்த தொழில் வாய்ப்புகளையும், அதன் அடையாளத்தையும் மீட்டுத் தருவதாக அமைந்துள்ளது, ‘திராவிட மாடல்’ அரசின் தொழிற்பூங்கா.

...சாதனை தொடரும்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131